# இலங்கை புகையிரத சேவை

# பெறுகை அறிவித்தல்

இலங்கை புகையிரத சேவையின் புகையிரத நிலையங்களில் அமைந்துள்ள நிலையான உணவகத்தை குத்தகைக்கு விடுவதற்காக பெறுகைக்குழு கேள்வி கோருகின்றது.

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ் காணும் உணவகங்களை இரு வருட காலத்திற்கு உணவு வகைகளை விற்பனை செய்யும் சேவையை நடத்தி செல்வதற்காக கீழே தரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவம் உள்ள கேள்விதாரர்களிடம் இருந்து முத்திரை இடப்பட்ட பெறுகைக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன .

1. கெகணதுரை 2. காலி நடை பாதை 3. பொல்காவெல மேல்மாடி 4. திருகோணமலை 5. பதுளை

மேற்படி உணவகங்கள் பற்றிய விபரங்கள் பெறுகை ஆவணங்களின் கீழ் அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ளது .

01. தகைமைகள்

குறித்த துறையுடன் சம்பந்தப்பட்ட வியாபாரமாக செல்லுபடியகும் பதிவு மற்றும் 01 வருட அனுபவம் இருப்பதோடு நிதி ஸ்திரதன்மையை உறுதி செய்ய 03 மாதங்களுக்கான வங்கி அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

02. கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல்.

பெறுகை ஆவணங்களை 2022 செப்டெம்பர் மாதம் 22 ம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத வர்த்தக மற்றும் சந்தை படுத்தல் அலுவலகத்தில் அல்லது உணவகம் அமைத்துள்ள புகையிரத நிலையத்தில் பெற்று கொள்ளலாம். அதற்காக கொழுப்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதம நிதி அதிகாரியிடம் அல்லது குறித்த உணவகம் அமைத்துள்ள புகையிரத நிலையத்தின் பொறுப்பதிகாரியிடம் மீளளிக்கப்படாத கேள்விபடிவக் கட்டணமாக ரூ. 1000/- தொகையைச் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளரிடம் அல்லது குறித்த புகையிரத நிலையத்தின் பொறுப்பதிகாரியிடம் சமர்பித்தல் வேண்டும். அத்துடன் கேள்விப்படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அந்த அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்விப்பிணையையும் செலுத்துதல் வேண்டும்.

03. கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் .

மேற்படி 02ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு உணவகம் சார்பாகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்திசெய்து இரு உரைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுரைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுரைகள் இரண்டையும் ஒரு உரையில் இட்டு அதன் இடதுபக்க மேல்மூலையில் உணவகத்தின் கேள்வி இலக்கம் மற்றும் உணவகத்தின் பெயரை குறிப்பிட்டு , "புகையிரத நிலைய உணவகத்திற்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட்டு அவ்வுரையை முத்திரையிட்டு 2022 செப்டெம்பர் மாதம் 23 ம் திகதி பி.ப 2.00 க்கு கிடைக்கக் கூடியதாக தலைவர் , திணைக்கள பெறுகைக்குழு , விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம் , புகையிரத தலைமையகம் ஒல்கொட் மாவத்தை , கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம். அல்லது புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளரின் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப்பெட்டியில் உள்ளிடலாம். அந்த நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்.

2022 செப்டெம்பர் மாதம் 23 ம் திகதி பி.ப 2.00 க்கு மேற்படி மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளரின் அறையில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரி அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி சமூகமளிக்க அனுமதிக்கப்படும்.

05. இலங்கைப் புகையிரத சேவையின் சகல ஊழியர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்பத்தின் நெருங்கிய அங்கத்தவர்களுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு உரிமை இல்லை.

06. கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்படி சகல உணவகங்களை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பங்கள் அளிக்கப்படும். அத்துடன் அதற்காக புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

07. திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானம் கடைசித் தீர்மானமாக இருக்கும்.

08. கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விவரங்களை இலங்கை புகையிரத சேவையின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே .இல - 011 2421281 (நீடிப்பு - 8235, பெக்ஸ் - 011 2431909)

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு ,
புகையிரத தலைமையகம்,
ஒல்கொட் மாவத்தை ,
கொழும்பு 10